Registered as a News paper in Ceylon

★ ★

விலை சதம் 20

# ஈழநாடு

வாரமலர்

மலர் 14 | றஜபு 24 | ஆவணி 18 | ஞாயிற்றுக்கிழமை | (3-9-72) | இதழ் 205

**திருக்குறள்**

லிக்கைவற் நீல சோப் மேலுறைகளில் திருக்குறள் அச்சிட்டு வெளிவருகின்றன. கடவுள் வாழ்த்துப் பகுதியில் உள்ள 10 குறள்களையும் ஒழுங்கு முறைப்படி சேர்த்து கொடுத்தால் உரையுடன் கூடிய திருக்குறள் புத்தகம் ஒன்றை பரிசாகப் பெறுவீர்கள்.

**லிக்கைவற் சோப் தொழிற்சாலை,**
த. பெ. இல. 77,
யாழ்ப்பாணம்.

# ஆருந் திகதி வேலைக்கு செல்லாவிடில் பதவி நீக்கம்

## வங்கி ஊழியருக்கு அரசு எச்சரிக்கை

(நமது நிருபர்)

வேலை நிறுத்தம்செய்து வரும் வங்கி ஊழியர்கள் வேலைக்குத் திரும்பவேண்டிய காலக்கெடுவை அரசாங்கம் விசேட அறிவித்தல் ஒன்றின் மூலம் வெளியிட்டுள்ளது.

இதன்படி வேலைக்குத் திரும்பாதவர்கள் 1972-ம் ஆண்டு அவசரகாலச்சட்டத்தின் 8-ம் இலக்க 4-ம் பிரிவின்கீழ் இலங்கை வங்கியிலிருந்து நீக்கப்படுவர்களாகக் கருதப்பட்டு புதியவர்கள் பதவியில் அமர்த்தப்படுவர் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலைநிறுத்தம் செய்து வரும் ஊழியர்களில் தகுதி வாய்ந்த நிலையில் இருப்பவர்கள் 5-ம் திகதி செவ்வாய்க்கிழமை அல்லது அதற்கு முன்பு, நிர்வாக ஊழியர்கள் 6-ம் திகதி புதன்கிழமைக்கு அல்லது அதற்கு முன்பு வேலைக்குத் திரும்பினால், இந் நிலமை அரசாங்கம் தளர்த்துமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் உரிய காலத்தில் திரும்பாவிட்டால் புதியவர்கள் வேலைக்குச் சேர்க்கப்படுவார்கள் என்றும் இவர்களை யாரும் வேலை செய்யாமல் தடுப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்களென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


அவசரகாலச் சட்டத்தின் 33-வது பிரிவின் கீழ் வரும் உபவிதிகளின்படி அத்தியாவசிய சேவை என ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்படும் சேவைக்கு போகாமல் இருப்பதோ அல்லது வேலைக்குச் செல்பவர்களைத் தடுப்பதோ பெருங் குற்றமாகும்.

## கிரி-ராஜாஜி சந்திப்பு

சென்னை, செப். 2

சென்னை வந்துள்ள இந்தியக் குடியரசுத் தலைவர் திரு வி. வி. கிரி முதுபெரும் அரசியல் தலைவரான திரு ராஜாஜியையும் முன்னாள் இந்திய ஜனாதிபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணனையும் சந்தித்து கலந்துரையாடினார்.

## காணிவல் திறப்பு விழா



இப்போது யாழ்ப்பாணமக்களின் கவனத்தை ஈர்த்துள்ள யாழ். விநோதக் களியாட்ட விழாவும் பொருட்காட்சியும் யாழ் நகரில் துரையப்பா விளையாட்டரங்கில் சென்ற 25-ந் திகதி யாழ் நகர மேயர் திரு. அல்பிரட் துரையப்பாவினால் திறந்து வைக்கப்பட்டது.

## விதை கிழங்கு இறக்குமதி மாதியாகக் குறைந்தது

(நமது நிருபர்)

விதை உருளைக்கிழங்கு இறக்குமதி பாதியாகக் குறைக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு நாணயச் செலாவணிக்கஷ்டம் காரணமாக விதை உருளைக்கிழங்கின் இறக்குமதியைக் குறைப்பதென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு உருளைக் கிழங்கு உற்பத்திக்கென சென்ற வருடம் ஒதுக்கப்பட்ட விதை உருளைக் கிழங்கில் சரிபாதியான அடுத்த வருடத்துக்கென இப்போது ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனால் கடந்த ஆண்டுகளில் உருளைக் கிழங்குச் செய்கையில் ஈடுபட்ட யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகள் உருளைக்கிழங்குச் செய்கையைக் குறைத்துக் கொண்டு அதற்குப்பதிலாக வேறு பயிர்களைச் செய்கை பண்ணவேண்டும்.

உருளைக்கிழங்குச் செய்கைக்குப்பதிலாக அதிக லாபம் தரும் வேறுபயிர்களைச் செய்கைபண்ணுவதில் ஈடுபட்டு உற்பத்தியைப் பெருக்குமாறு யாழ் மாவட்ட விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் திரு. பொ. மாணிக்கவாசகர் விவசாயிகளைக் கோரியுள்ளார்.

# மாஸ்கோ சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை

## 'எத்த' விளக்கம்

[கொழும்பு நிருபர்]

மாஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சி மார்க்ஸிய லெனினிஸ கோட்பாடுகளிலிருந்து சிறிதும் விலகிச் செல்லவில்லை, ஐக்கிய முன்னணி அரசின் அங்கம் வகிக்கும் அதே சமயம் தொழிலாளர் வர்க்கத்தை அது சரியான வழியில் அழைத்துச்செல்லும்.

மாஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் ஏடான 'எத்த' மேற்கண்டவாறு எழுதியுள்ளது. கட்சியின் மத்திய பீடத்தில் ஏற்பட்ட மாற்றங்களையடுத்து வெளியிட்டுள்ள கொள்கை விளக்கத்தில் மேற்கண்டவாறு 'எத்த' எழுதியுள்ளது.

பொதுமக்கள்மீது பாரங்களை மேலும்மேலும் சுமத்தும் நடவடிக்கைகளைக் கட்சி கடுமையாக எதிர்க்கும், ஐக்கிய முன்னணி தேர்தல் அறிக்கையில் கண்டுள்ள சோஷலிசக் கொள்கைகளை விரைவாக அமுல்செய்யும்படி கட்சி வற்புறுத்தும் என்று அது மேலும் எழுதியுள்ளது.

டாக்டர் விக்கிரமசிங்காவை அக்கட்சியின் தலைமையிலிருந்து நீக்கும் முயற்சியின் தோல்வியில் முடிந்துள்ளது. ... இப்பொழுது வெள்ளை ஆரம்பித்ததிலிருந்து இப்பொழுது வரையில் அரசாங்கம் சோஷலிசக் கொள்கைகளிலிருந்து ... போதெல்லாம் அச்சமின்றி கண்டித்துவரும் என்று குறிப்பிட்டுள்ளது. [வி பிஏ]

## அன்பில் மீண்டும் விவசாய அமைச்சர்

சென்னை, செப். 2

தமிழ்நாடு மந்திரி சபையை விரிவாக்கும் நோக்கம் இப்போதைக்கு இல்லையென்றும் இலாகாக்களை மாற்றும் நோக்கமும் இல்லையென்றும் முதலமைச்சர் திரு. கருணாநிதி இன்று தெரிவித்தார்.

திரு. அன்பில் தர்மலிங்கம் தமிழ்நாடு விவசாய அமைச்சராக இன்று பதவிப்பிரமாணம் எடுத்தார்.

## 6 பேர் பலி

சென்னை, செப். 2

சென்னையில் பழைமையான கட்டிடமொன்று இடிந்து விழுந்ததில் ஆறு பேர் மாண்டனர். காயமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவரும் ஏழு பேரில் ஒருவரின் நிலை ஆபத்தாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு

**டொலர் அலுமினியம்**

ONE-DOLLAR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குடும்ப கௌரவம்

அம்மா, இந்த மனுப்பத்திரத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும் கொஞ்சம் உதவி செய்கிறீர்களா? என்று கேட்டாள் தேவிகா. 'என்ன பத்திரம்? இப்படிக் கொண்டு வா பார்ப்போம்' என்று சொன்னதும் அதை அவர் கையில் கொடுத்து 'நர்ஸ் வேலைக்கு மனுச்செய்ய வந்தது...' என்று இழுத்தாள் தேவிகா.

என்ன, நர்ஸ் வேலை பார்க்கப் போகிறாயா? உம்! நன்றாயிருக்கிறது நீ எங்கள் குடும்ப கௌரவத்தைப் பற்றி யோசித்துப் பார்த்தாயா? குடும்ப கௌரவத்தைக் காற்றில் பறக்கவிடுவதா எண்ணமா? இப்படியான ஒரு தொழில் நீ பார்க்க வேண்டியதில்லை... நர்ஸ்களைப்பற்றி நல்ல அபிப்பிராயம் நிலவுவதே குறைவு. என்று கூறினார் அவள் அப்பா.

'ஏனப்பா இப்படிப்பட்ட புனிதமான ஒரு சேவையைச் செய்வதால் குடும்ப கௌரவம் எப்படிப் பாதிக்கப்படும்...?' தன் குறிக்கோளை நிறைவேற்றும் எண்ணத்தோடு கேட்டாள் தேவிகா.

அவளுடைய தந்தை ஏன் அவர்கள் வாழும் சமுதாயமே இவ்வளவு குறுகிய மனப்பான்மை உடையதாய் இருக்கிறதே! அவள் தந்தையே இப்படி என்றால்...? அவள் தந்தை தன் குடும்ப கௌரவத்திற்காகப் படும் பாடு அவளுக்குத் தெரிந்திருந்தபோதிலும் தக் குடும்ப கௌரவம், தான் நர்ஸ் தொழில் பார்ப்பதால் எவ்விதத்தில் பாதிக்கப்படும் என்பது தான் அவளுக்குப் புரியாத புதிராக இருந்தது.

தந்தைக்கும் மகளுக்கும் இடையில் சிறிது நேர மௌனம் மீண்டும் அவளே பேச்சை ஆரம்பித்தாள். 'அப்பா என் அம்மாவிற்கு விறகு வெட்டியபோது எங்கள் கவலையீனத்தால் தானே அவள் இறக்கநேரிட்டது. நாம் போதிய அளவு கவனம் செலுத்தியிருந்தால் அவள் இப்படி ஏற்பிணுல் திடீரென எங்களை தனியவிட்டு இறக்க வேண்டியநிலை ஏற்பட்டிருக்குமா? இப்படி எத்தனை குடும்பங்கள் அனுவசியமாக சீரழிகின்றனவோ? நான் எனது சேவையினால் ஒரு உயிரையாயினும் காப்பாற்ற முடியுமானால், அதனால் ஏற்படும் ஆனந்தம் இந்தக் குடும்ப கௌரவத்தைவிட உயர்ந்ததல்லவா?' என்று தான் அச்சேவையின் மகத்துவத்தைப்பற்றி கொண்டிருந்த அபிப்பிராயத்தையும் அறிந்துகொண்டிருந்தவற்றையும் சேர்த்து ஒரு குட்டிப்பிரசங்கமே செய்து விட்டாள். ஆனால் இதையெல்லாம் கேட்டும் அவள் அப்பா முருகேசம்பிள்ளைக்கு ஏனோ கோபம் கூடியதே தவிர குறையவில்லை. தேவிகாவிற்கு கண்களில் நீர் சுரந்தது. தன் கவலையைப் பெருமூச்சாக வெளிவிட்டபடியே அவள் மனுப்பத்திரத்தையும் பேனாவையும் மூடி மேசையில் வைத்துவிட்டு பக்கத்திலிருந்த கதிரையில் இருந்தபடியே சிந்தனையில் ஆழ்ந்துவிட்டாள்:

முருகேசம்பிள்ளை ஓய்வு பெற்றபின் அவர் குடும்பத்தின் நிலை சிறிது தளர்ச்சி அடையத் தொடங்கியது. தேவிகாவே குடும்பத்தில் தலைப்பிள்ளையாக இருந்ததினாலும் படித்த பெண்ணாக இருந்ததனாலும் அவள் உத்தியோகம் பார்த்துக் குடும்பத்திற்கு உதவி செய்யும் அவசியம் ஏற்பட்டது. தன் உழைப்பினுல் தன்குடும்பத்திற்கு மட்டுமன்றி நாடு முழுவதுக்குமே தொண்டு செய்யவேண்டும் என்று ஓர் ஆர்வம் அவள் மனதில் பட்டது. சிறுவயது முதல் தேவிகாவிற்கு தன் சகோதரக் குழந்தைகளைக் கவனிப்பது முதல் தாய்தந்தையரின் கஷ்டம் ஏதுமின்றிக் கவனிப்பது வரை எத்தனையோ கடமைகள் அதிலும் அவள்தாய் இறந்துவிட்டபின்பு தன் குடும்பத்தின் பாரம் முழுவதையும் அவள் தலைமேற் படிப்பையும் இன்பமான பள்ளி வாழ்க்கையையும்கூட தியாகம் செய்துவிட்டு ஏற்றுக்கொண்டாள். எந்தநேரமும் தன் சகோதரர்களுக்கும் தந்தைக்கும் சேவை செய்வதிலேயே அவள் பொழுதைக் கழித்தாள். இதற்கு ஏற்ற பண்பும், அன்பும், பொறுமையும் ஆற்றலும் நிறைந்தமனம் அவளுக்கு இயற்கையாகவே அமைந்திருந்தது.

இப்பொழுது அவள் தம்பியும், தங்கையும் வளர்ந்து தங்கள் படிப்பையும், தங்கள் தேவைகளையும் தாங்களே கவனித்துக்கொள்ளக்கூடிய நிலையில் இருந்தனர். இதனால் தேவிகா இதுவரை தன் மனதில் வளர்த்து வந்த ஆசைப்படி தான் ஒரு நர்ஸ் ஆகலாம் என ஆசைப்பட்டாள். அவளுடைய தாய் நோய்வாய்ப்பட்டு இறந்த காலம் தொட்டே, அவளுக்குத் தான் ஓர் நர்ஸ் ஆகி நோய் வசப்பட்டுத் தவிக்கும் மக்களுக்கெல்லாம் சேவை செய்யவேண்டும் என்ற எண்ணம் உண்டாகி விட்டது.

'நான் சிறுமியாகப் பள்ளிக்கூடம் செல்லும் காலத்தில் அம்மாவிற்கு நோய் வந்ததனுல் தானே அவளைக் கவனிப்பதற்கு யாரும் இல்லாத நிலையில் அவள் இறக்கவேண்டி நேர்ந்தது. என்தாய் இறந்ததனால் எங்கள் குடும்பம் எவ்வளவோ கஷ்டங்களைச் சமாளிக்க வேண்டியிருந்தது. எங்களைப்போன்று எத்தனை குடும்பங்கள் அவதிப்படும்; எங்கள் அம்மாவைப் போன்று கவலையீனத்தால் எத்தனைபேரை இறக்கவிட்டிருப்பார்கள்... இதைத் தடுக்க. என் போன்றவர்கள் எத்தனைபேர் சேவை செய்வதற்கு முன் வருகிறார்களோ, அத்தனைக்கு அத்தனை நோயாளிகளைக் காப்பாற்றி அவர்கள் குடும்பங்களின் கண்ணீரையும் துடைக்க முடியும். இதை என் அப்பா உணருகிறாரில்லை. வெறும் வரட்டுக்கௌரவம் பேசுகிறாரே! என் குடும்பத்தவரின் நலத்தைப் பாதுகாத்துக் கொள்வது ஒருகடமை அது சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் நாட்டில் உள்ள பலருடைய நலன்களைப் பாதுகாப்பது தான் உண்மையான சுயநல மற்றசேவை. இப்பேற்பட்ட ஒரு சேவையைச் செய்வதற்கு நாம் பெரும் பாக்கியசாலிகளாக இருக்கவேண்டும்.

சந்தர்ப்பம் சூழ்நிலையால் சிலநர்ஸ்கள் வீண்பழிக்கும் அவமானத்துக்கும் உள்ளாகிறார்கள். அதற்காகப் புனிதமான இத்தொழிலுக்குக் களங்கம் கற்பிக்கலாமா? பொதுவாக இன்றைய உலகில் உத்தியோகம் பார்க்கும் பெண்கள் அத்தனைபேரும் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. இக்கஷ்டங்களையெல்லாம் முறியடித்து அடிக்க அடிக்க விசை கொண்டு எழும் பந்துபோல் முன்னேற வேண்டும் பெண்கள். தங்களில் சுமத்தப்படும் வீண் அபவாதங்களையும் பழிகளையும் பொருட்படுத்தக்கூடாது— இப்படி தேவிகாவின் சிந்தனை சென்றது.

தேவிகாவின் இந்த ஆசைத்தீக்கு நெய் வார்த்து வந்தாள் அவளது ஆருயிர்த்தோழி நிர்மலா. அவள் ஒரு டாக்டரின் மகளாக வசதி மிக்க குடும்பத்தில் பிறந்து வளர்ந்தும், தேவிகாவுடன் பழகியதாலோ என்னவோ அவளும் மிகுந்த சேவை மனப்பான்மையும், தாராள குணமும் நிறைந்து காணப்பட்டாள். அவளும் அவளுடைய தந்தையும் தேவிகாவின் எண்ணத்திற்கு உற்சாகம் அளித்தனர்.

முருகேசம்பிள்ளையின் சிந்தனை கடிகாரம்பத்து அடித்து நின்றபோதுதான் தடைப்பட்டது ஆனால் தேவிகாவோ தன் சகோதரர்கள் பள்ளியிலிருந்து சாப்பாட்டிற்கு வரப் போகிறார்களே என்ற யோசனைகூட இல்லாது ஆழ்ந்த சிந்தனையில் இருந்தாள். இதைக்கண்ட அவள் அப்பா "தேவிகா, சமையலுக்கு நேரமாகவில்லையா தம்பியும் தங்கையும் பாடசாலையால் வரப்போகிறார்கள். நீ நாட்டிற்குச் சேவை செய்யமுன் உன் குடும்பத்திற்கு சேவைசெய்யும் வழியை இப்போது பார்...'! தேவிகா வேதனைமிக்க உள்ளத்துடன் சமையல் அறையை அடைந்தாள்.

சமையல் முடிந்ததும் குளித்துவிட்டு வந்த தேவிகா தன் தந்தை "தேவிகா, தேவிகா"! என்று அலறும் [illegible] சாப்பிட்டு [illegible] கட்டிலில் படுத்துக்கொண்டு வயிற்றைப் பிடித்துக்கொண்டு புரண்டுகொண்டிருந்தார். அவர் வாய் முனகிக் கொண்டிருந்தது. உடலெல்லாம் வியர்த்துக் களைப்பினாலும் வேதனையாலும் சோர்ந்திருந்தது. அவர் வேதனையைக்கண்ட தேவிகா அவர் அருகில் சென்று வயிற்றை மெல்லத்தடவி நோகிறதா அப்பா என்று கேட்கும்போதே ''ஐயோ'' என்ற அவருடைய வாயிலிருந்து சற்று உரத்த ஒலிவந்தது. அப்போதுதான் சாப்பிடுவதற்கு வீட்டிற்கு வந்த தம்பியை அவசரமாக தெருவுக்கு அனுப்பி கார் ஒன்றை வரச்செய்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றாள் தேவிகா. டாக்டர் சோதித்துவிட்டு "அப்பென்டிக்ஸ் ஆப்பரேஷன் உடனடியாகச் செய்யவேண்டும்" என்றார். உடனேயே ஆப்பரேஷனைச் செய்வதற்கு மிகுந்த பரபரப்புடன் ஆயத்தம் செய்[தனர்].

முருகேசம்பிள்ளை இயற்கையிலேயே பயந்தசுபாவம் உள்ளவர். அவருக்கு ஆப்பரேஷன் என்றதுமே தன் மனைவியின் மரணமும், தனக்கு ஏதாவது நடந்துவிட்டால் தன் பிள்ளைகளுக்கு ஏற்படக்கூடிய அவல நிலையுமே நினைவுக்கு வந்தன. அவர் 'ஸ்ரெச்ச'ரில் படுத்ததும் மனம் திக்திக்கென்று அடிக்க கண்களில் நீர் நிறைய தேவிகாவைப் பார்த்தார். ஆப்பரேஷன் தியேட்டருக்கு எடுத்துச் செல்லப்பட்டபோதும் வெளியே நின்றுகொண்டிருந்த தேவிகாவை பார்வைக்கு மறையும் வரை கண்கலங்கப் பார்த்துக் கொண்டே சென்றார்.

இதையெல்லாம் கவனித்துக்கொண்டே இருந்த ஓர் இளம் நர்ஸிற்கு அவர் மனம் புரிந்துவிட்டது. தன்வயதை யொத்த ஓர் இளம்பெண்ணை வெளியே தவிப்புடன் காத்திருக்கவிட்டுவிட்டு தன் உயிரை இன்னொரு மனிதனின் திறமையின் பேரில் ஒப்படைத்துவிட்டுச் செல்லும் ஒரு தந்தையின் மனம் எவ்வளவு வேதனை அடையும் என்பது அவளுக்கு நன்றாகத் தெரிந்தது அவள் மெல்ல

**'காருகலா'**

அவர் அருகே சென்று அவருக்கு ஆப்பரேஷன் செய்யப்போகும் டாக்டரின் திறமையைப்பற்றியும் அவரது அருமையான குணங்களைப்பற்றியும் அவரைக் கவனித்துக் கொள்ளப்போகும் இன்னொரு நர்ஸைப்பற்றியும் இனிமையாகவும் கலகலப்பாகவும் பேசிக்கொண்டே, அவரை ஆப்பரேஷனுக்குத் தயாராக்கினுள். மேலும் அவள் 'ஐயா நாங்களெல்லோரும் உங்கள் பிள்ளைகளென்றே நினைத்துக்கொள்ளுங்கள். உங்கள் உடம்பு குணமாகி நீங்கள் இங்கிருந்து போகும் வரை நாங்கள் எந்நேரமும் உங்கள் வசதிகளைக் கவனித்துக் கொள்வோம். நீங்கள் எதற்கும் பயப்படாது நம்பிக்கையுடன் எங்களுடன் ஒத்துழைக்கவேண்டும். அப்போது உங்களுக்கு ஒரு கஷ்டமும் தெரியாது' என்று அன்பொழுகக் கூறியபோது, அவருடைய உடலும் உள்ளமும் குளிர்ந்து சிலிர்த்தன. தூய வெண்மையான உடைகளை அவள் அணிந்திருக்கவில்லை; அவளது உடை போலவே அவள் மனமும் தூய்மையானதாக உள்ளதை உணர்ந்தார். சுறுசுறுப்பு மிக்க கைகால்களுடன், அன்பும், நம்பிக்கையும் பொங்கப் பேசிக்கொண்டு உரிமை கொண்டாடும்முகமாகநிற்கும் அந்த நர்ஸ் அவருக்கு அந்நேரத்தில் தன் சொந்த மகளாகவே தோன்றினுள். அவளைப்பார்த்தபடியே அவர் ஆப்பரேஷனுக்குத் தயாராகப் படுத்திருந்தார். அவர் மனதில் இருந்த பயம், கலக்கம், அவநம்பிக்கை எல்லாம் மறைந்து ஒருவித நம்பிக்கையிலும் நிம்மதியிலும் மனம் தெளிவு அடைந்தது.

ஆப்பரேஷன் முடிந்து அவர் வார்டுக்கு கொண்டு செல்லப்பட்டார். இரண்டு நர்ஸ் பெண்கள் மும்முரமாகச் சுழன்று வந்து அவருக்குவேண்டியவற்றைச் செய்து அவரை ஆறுதலாகப் படுக்கச்செய்து தம் கடமையைச் செய்துகொண்டிருந்தனர். சிறிது நேரத்தில் தேவிகா அவரைப்பார்ப்பதற்கு வந்தாள். அன்புடனும் பாசத்துடனும் அவருக்கு வேண்டிய வசதிகளைச்செய்வதில் முனைந்தாள். ஆனால் அவள் செய்வதற்கு அந்த நர்ஸ்கள் இடமளித்தால் தானே. எவ்வளவோ வித்தியாசம். அவர்களுக்கென்று எப்படித்தான் இவ்வளவு சுறுசுறுப்பும் அனுதாபமும் அமைந்திருக்கின்றனவோ! இதற்கென்றே விசேஷ பயிற்சிபெற்ற பெண்மணிகளல்லவா அவர்கள். அவர்களை அன்புடனும், ஆச்சரியத்துடனும் பார்த்து ரசிப்பதுபோலவே தேவிகாவும் ஆசையுடனும் ஒருவித ஏக்கத்துடனும் அவர்களைப் பார்த்துக்கொண்டே இருப்பதை அவர் கவனிக்கத்தவறவில்லை. அவளுக்கு அந்த நர்ஸ் பெண்களைப்போல் அனுபவம்தான் இல்லை. ஆனால் அவர்களிடம் உள்ள ஆற்றலும், திறமையும் அவளுக்கு இல்லாமல் இல்லை. அவர்களைப்போல அவளும் பயிற்சி அளிக்கப்பட்டால்... இப்படியாக அவர் மனதில் பலவித எண்ணங்கள் எழுந்தன இந்த வேளையில் குடும்பக்கௌரவம் என்ற அரக்கப் பட்டம் இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. 'கடமையுணர்ச்சியோடும், சேவைமனப்பான்மையோடும் மனிதாபிமானத்தோடும் கள்ளம்கபடமெதுவுமின்றிச் செய்யும் தொழில் புனிதமானதே. குடும்பக்கௌரவத்தை இத்தத்தொழில் பாதிக்காது. தேவிகாவை இத்தொழிலுக்கு அர்ப்பணம் செய்வேன்'—படுக்கையில் கிடந்துகொண்டு இவ்வாறு எண்ணினார் முருகேசம்பிள்ளை.

வீட்டிற்கு வந்துவிட்ட பிறகுங்கூட அவர் கண்களில் இருந்து அந்த நர்ஸ் பெண்களின் தோற்றமும் சேவையும் மறையவில்லை. அவர்களைப் பிரிந்துவரும்போது அவர் கண்களில் நிறைந்த நீரும் நெஞ்சில் நிறைந்த அன்பும்தான் அவர்களை வாழ்த்தி விடைபெற்றன.

வீட்டில் தேவிகாதான் நர்ஸ் போல அவரைக் கவனித்து வந்தாள். அவள் தன் தந்தையைமட்டுமே கவனிக்கிறாள். அவள் அவர் ஒருவருக்கு மட்டுமே சேவை செய்யமுடியும். ஆனால் அப் பெண்களோ எத்தனை ஜீவன்களுக்கு, தம் தந்தை சகோதரர்களுக்கு எல்லாம் பணிபுரிகிறார்கள். ஆம்! அவர்களுக்கு உலகமெல்லாம் உற்றவர்கள் உறவினர்கள். அவர்களின் சேவை உலகம் முழுவதற்கும் உரியது. என் மகளும் இப்படியான ஓர் பாக்கியசாலியாகமுடியாதா? இப்படியான ஒரு யாத்த நோக்கு உண்டானதும். தன்னை மறந்து படுக்கையிலிருந்து எழுந்து மெதுவாக நடந்து மேசையை அடைந்தார். அதில் காகிதங்களில்

(10-ம் பக்கம் பார்க்க)

**தம்பி அன் கோ.,**

முப்பதாவது ஆண்டில் ஜுபிலி சேமிப்பிற்கு
(Jubilee Deposits)
ரூபா 1000/-க்கு ரூபா 1000/- வட்டி
ஆறு ஆண்டின் பின் கொடுக்கப்படும்
இடையில் எடுத்தால் வருடம் 8 சதவீத
வட்டியுடன் கொடுக்கப்படும்.

மறு விபரங்கட்கு:

தம்பி அன் கோ.

வண்ணார்பண்ணை — திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மணிமொழி



கடமைகளின் மூலம் செயல்படும் கர்மமே எவ்வித கடமைக் கருத்தும் இல்லாது புரியப்படும் கர்மத்திற்கு நம்மை இட்டுச் செல்கிறது. எப்பொழுதும் கர்மமே உபாசனை ஆகிறதோ அல்லது உபாசனையைவிட இன்னும் உயர்ந்த ஒன்றாக ஆகின்றதோ அப்பொழுதே கர்மத்திற்காகவே கர்மம் செய்தல் என்பது நடைபெறும்.

— சுவாமி விவேகானந்தர்




# ‘நாட்டைக் காக்க நிதி’ கொடுத்தவர்களே இன்று வேலை நிறுத்தம் செய்வது ஏன்?

வங்கி ஊழியர் வேலை நிறுத்தம் ஆரம்பமாகியிருக்கிறது. வேறு துறைகளுக்கும் வேலை நிறுத்தம் பரவுவதற்கான அறிகுறிகள்

### வாரசாரம்

தென்படுகின்றன. வங்கி ஊழியரின் வேலை நிறுத்தப் பயமுறுத்தலுக்குப் பணிய முடியாதென்ற முறையில் அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கைகள் இருக்கின்றன. இதே சமயம் அரசாங்கம் வேலை நிறுத்தத்தை அச்சுறுத்தி நிராகரிக்க முயலுதலும் செயல்களுக்குப் பணிந்து கொடுக்க முடியாதென்ற முறையில் மத்திய வங்கி ஊழியர் சங்கமும் விடுத்துள்ள அறிக்கையிலிருந்து பார்க்கையில் எதுவும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடலாமென்று கருதஇடமுண்டு. வங்கி ஊழியருடன் சமரசம் பேசுவதற்குத் தயாராக இல்லையென்று அரசாங்க அறிக்கைகள் கூறுகின்றன. வேலை நிறுத்தம் செய்யும் வங்கி ஊழியர் குறித்த தினத்துக்குள் வேலைக்குத் திரும்ப வேண்டும் என்றும் இல்லையேல் அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவார்களென்றும் அரசாங்கம் எச்சரிக்கை விடுக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. நீர்ப்பாசன மின்சக்தி நெடுஞ்சாலைகள் அமைச்சை சேர்ந்த தொழில் நுட்ப ஊழியர்களின் வேலை நிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சேவையும் அவசர காலச்சட்டத்தின்கீழ் அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தியும் கூட அவர்கள் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர். அவர்களை வேலை நீக்கம் செய்வதாக அறிவித்துக் கொடுக்கப்பட்டு அந்த இடங்களுக்குப் புதிய ஆட்களைத்தெரிவு செய்வதற்காக சில பத்திரிகைகளில் விளம்பரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் தொழில் நுட்ப ஊழியர்கள் விட்டுக்கொடுப்பதாக தெரியவில்லை.

வேலை நிறுத்தம் செய்யும் ஊழியர்களும் விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை. அரசாங்கமும் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. எந்த வேலை நிறுத்தமும் எந்தப் போராட்டமும் இப்படித்தானிருப்பது பின்னர் இருதரப்பினரும் தமது கௌரவத்தை விட்டுக்கொடுக்காத முறையில் எவருக்கும் தோல்வியில்லையென்று சொல்லக்கூடிய முறையில் ஓர் உடன்பாட்டுக்கு வருவது வழக்கம்.

இப்போது வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டுள்ள தொழிற் சங்கங்கள் சில ஆளும் கூட்டணியைச் சேர்ந்த இலங்கசமசமாஜக் கட்சியின் கட்டுப்பாட்டிலும், ஆதரவிலும் உள்ளவை.

கூட்டணியினர் ஆட்சிக்கு வந்தபின்னர் இரு பெரும் பத்திரிகை நிறுவனங்களில் வேலை நிறுத்தம் நடைபெற்றது. இவை வெற்றியளிக்கவில்லை.

வங்கிஊழியர்களின் வேலை நிறுத்தம் இலேசில் முடியாதில்லை. இப்போதுள்ள நிலைமைகளைக் கவனிக்கும்போது இதர துறைகளில் வேலை நிறுத்தம் தொடங்கப்படுவதுடன் மற்றும் துறைகளில் அடையாள வேலை நிறுத்தங்களும் அனுதாப வேலை நிறுத்தங்களும் கூட ஆரம்பிக்கப்படலாம்.

சம்பள உயர்வுக் கோரிக்கையே இந்த வேலை நிறுத்தங்களுக்கு காரணமாக இருக்கின்றது.

நாட்டில் வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகரித்திருக்கிறது. ஒரு வேளை சாப்பாட்டுக்கே வழியில்லாதவர் உள்ளனர். வாழ்க்கைச் செலவு விஷம் போல் ஏறிக்கொண்டிருக்கிறது. நாடோ வெளிநாடுகளில் கையேந்தும் நிலையில் உள்ளது

நாட்டைக் காப்பாற்ற நிதி [illegible] தியும் உள்ளவர்கள் வேலை நிறுத்தம் செய்து நாட்டின் பொருளாதார நிலையை மேலும் மோசமாக்குவது நியாயமாகுமா? என்று கேட்பதில் நியாயமுண்டு என்றாலும் அரசாங்கம் செய்யும் செலவுகள் எல்லாம் நாட்டின் நிலையைக்

### எஸ். எம். ஜி.

கருத்திற் கொண்டுதான் செய்கின்றனரா என்ற கேள்விக்கும் நியாயம் இல்லாமலில்லை.

கூட்டணியினர் ஆட்சிக்கு வருவதற்குப் பெருமளவில் உதவியும் ஒத்துழைப்பும் அளித்தவர்கள் தொழிலாளர்கள் ஆட்சிக்கு வந்ததும் நெருக்கடி காலமாக இருக்கிறதென்றும் நிதி இல்லையென்றும் நாட்டைக் காப்பாற்ற உதவிபுரியவேண்டுமென்றும் நிதி அமைச்சர் விடுத்த வேண்டுகோளுக்கு உடன் செவிமடுத்து ஒரு நாள் சம்பளத்தைத் தியாகம் செய்து நிதிஉதவியளித்தவர்களும் இந்த ஊழியர்கள்தான்.

இதே ஊழியர்கள் இன்று சம்பள உயர்வுகோரி வேலை நிறுத்தம் செய்ய முன்வந்துள்ளனர் என்றால் அதற்கென்ன காரணம்?

வாழ்க்கைச் செலவைக் குறைப்போம். வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்போம் உண்மையான சோஷலிச ஆட்சியை அமைப்போம் என்று கூட்டணியினர் கொடுத்த வாக்குறுதியை அவர்கள் நிறைவேற்றுவது மட்டுமல்ல அவர்கள் நிறைவேற்றுவார்களென்பதற்கான அறிகுறிகளும் தென்படாததும் தான் காரணமாக இருக்க வேண்டும்.

தேர்தல் சமயத்தில் கொடுத்த வாக்குறுதியை உடனடியாக நிறைவேற்ற முடியாதென்றும் சோஷலிச விரோத சக்திகள் இடையூறு செய்கின்றனவென்றும் இப்போது சொல்வதில் அர்த்தமில்லை. இந்த நிலைஏற்படுமென்பதை வாக்குறுதி கொடுக்கும்போதே சிந்தித்திருக்கவேண்டும்; அதைச் சமாளிப்பதற்கு அப்போதே திட்டமிட்டுமிருக்க வேண்டும்.

ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி கனவு கண்டதில் பலனில்லை. அந்தத் திட்டம் சரியான முறையில் செயல்பட்டு வெற்றியளிக்குமா என்ற சந்தேகமே இப்போதே தோன்றத் தொடங்கியிருக்கிறது.

எதெதற்கெல்லாமோ செலவுசெய்வதை விடுத்து வாழ்க்கைச்செலவு உயர்வைக் குறைப்பதற்கு கட்சி மற்றும் இன, மொழிபேதமின்றி தலைவர்களோடுடைய ஒத்துழைப்புடனும் முயற்சி மேற்கொள்ள அரசாங்கம் போலிக்கௌரவத்தை கைவிட்டுத் துணிச்சலுடன் முன்வந்தாலொழிய இது சாத்தியமாகாது. வாழ்க்கைச்செலவு உயர்வைத் தடுத்து நிறுத்திக்குறைக்காதவரை வேலை நிறுத்தப் போராட்டங்களைத் தடுப்பது சிரமந்தான்.

---

ஈழநாடு

பரிதாபி வருடம் ஆவணி மாதம் 18-ம் திகதி (3—9—72)

## குறிக்கோள்

சென்ற வெள்ளியன்று ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி. கிருஷ்ணன் வைணவர்களுக்குரிய கடவுளென்றும், சைவர்களுக்கோ, மற்றசமயத்தவர்களுக்கோ அல்லவென்றும் பொதுவாக ஒரு கருத்துண்டு.

நல்லவேளையாக ஈழத்திலே சைவ வைணவ பேதம் இல்லை. யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலிலும், பொன்னாலை கோவிலிலும் நடைபெற்ற ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி விழா வழிபாட்டில், சைவர்கள் எவ்வித வேற்றுமையுமின்றி பக்தியுடன் ஏராளமாகக் கலந்துகொண்டதே இதற்குச் சான்று.

‘சிவஸ்ய ஹிருதயம் விஷ்ணு. விஷ்ணோஸ்ய ஹிருதயம் சிவ’ அதாவது சிவபெருமானுடைய இதயத்திலே விஷ்ணுவும், விஷ்ணுவின் இதயத்திலே சிவபெருமானும் உள்ளனரென்பது வேதவாக்கு. இதனால் இருவரும் வேறு அல்ல என்பதும், இருவரும் ஒருவரே என்பதும் தெரிகின்றது

சிவவிஷ்ணு விஷயத்தில் மட்டுமல்ல. எல்லாச் சமயக் கடவுள் விஷயத்திலும் இப்படித்தான். கடவுள் ஒருவரே என்பதை எல்லாச் சமயங்களும் ஒப்புக்கொண்டிருக்கையில், என்ன பெயரால் அழைப்பினும் அது ஒரே ஒரு பரம் பொருளையே குறிக்கும் என்பதை விளக்கத் தேவையில்லை

கடவுளைப் பற்றிப் பேசாத பௌத்த மதத்தவர்களும்கூட ஈழத்திலே கதிர்காமத்திலும் முன்னேச்சரத்திலும் பயபக்தியுடன் வழிபடுவதைப் பார்க்கின்றோம். அவர்களுக்கும் ஒரு கடவுள் தேவைப்படுகின்றது.

என்ன செய்வதென்று அறியாது மனம் தத்தளிக்கையில், நம் ஒவ்வொருவர் உள்ளத்திலிருந்தும் நம்மை நல்வழிப்படுத்த ஒரு துணைவன் இருக்கின்றான் என்ற நம்பிக்கை ஏற்பட்டு அவன் காட்டும் வழியிலேயே வாழ்க்கையை நடத்துபவருக்கு இன்னலே என்றும் இல்லை.

‘எல்லா உயிர்களிலும் நானே இருக்கிறேன்’ என்றுரைத்த கீதாசாரியனது வாக்கை உணர்ந்து அவ்விதமே நடப்பின் நாம் உண்மையில் அன்பு வாழ்க்கை வாழவும், பேரின்பம் பெறவும் முடியும். நம்வாழ்க்கையின் குறிக்கோளும் அதுவேயாகும்.

இப் பத்திரிகை ‘ஈழநாடு’ லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 19[illegible] செப்டம்பர் மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## முழுக்க முழுக்க தமிழில் நடைபெற்றது

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்திலும் மேலதிக மாவட்ட நீதிமன்றத்திலும் விசாரணைகள் நேற்று முழுக்க முழுக்க தனித்தமிழில் நடைபெற்றன இவ்விரு நீதிமன்றங்களிலும் விசாரணைகள் தொடர்ந்து தனித்தமிழில் நடைபெறும்.

யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. கெவின்மென்டிஸ் பதில் மாவட்ட நீதிபதியாக நேற்றுக்கடமையாற்றினார் காரியாலய குறிப்புகள் விண்ணப்பங்கள் யாவும் தனித்தமிழில் இடம்பெற்றன.

மேலதிக மாவட்ட நீதிபதியாக திரு. ஜே ஜி ஆசீர்வாதம் நேற்று கடமையாற்றினார். வழக்குபற்றிய விபரங்கள் மற்றும் குறிப்புகள் யாவும் தமிழிலேயே தெரிவிக்கப்பட்டன நீதிபதியும் வழக்கறிஞர்களுடன் தமிழிலேயே பேசிக்கொண்டார்.

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றங்களில் விசாரணைகளும் பதிவுகளும் தமிழில் நடைபெறவேண்டுமென்றும் இதற்கு யாழ் வழக்கறிஞர் சங்கம் பூரண ஒத்துழைப்பு கொடுக்குமென்று சங்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

## மொண்டிசோரி சேமிப்பு இயக்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மொண்டிசோரி மாணவர்களுக்காக சேமிப்பு இயக்கமொன்று திருநெல்வேலி மொண்டிசோரிப் பாடசாலையில் கடந்த 28ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. பகுதிக் கிராம சேவையாளர் திரு. வே. செல்லரத்தினம் இயக்கத்தை ஆரம்பித்து வைத்தார். சேமிப்பு உண்டியல்களை திரு. ஜே. என். பொன்னையா வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org